**சுருக்கம்**

பணியமைப்பு – வேளாண்மை-உழவர் நலத் துறை – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படையில் கிடங்கு மேலாளர் (தரம்-3) பதவியில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ள திரு.சோ.மோகன்பாபு என்பவரின் பணியினை 19.10.2012 முற்பகல் முதல் வரன்முறை செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**வேளாண்மை – உழவர் நலத் (வேநி9) துறை**

திருவள்ளுவர் ஆண்டு 2053. சுபகிருது, புரட்டாசி மாதம் 10-ம் நாள்

அரசாணை (3டி) எண்.131 நாள்:27.09.2022

படிக்கப்பட்டது :

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ1) துறை, நாள் 23.01.2020.
2. வேளாண்மை இயக்குநர் கடித எண் அநிபி8 / 5674 / 2018, நாள் 17.11.2020 மற்றும் 19.03.2022.

*****

ஆணை:

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், நாகப்பட்டினம் மாவட்டம், வேளாண்மை இணை இயக்குநர் கட்டுப்பாட்டில், திருமருகால் வேளாண்மை வளர்ச்சி அலுவலர் அலுவலகத்தில் உதவி வேளாண்மை அலுவலராக பணிபுரிந்து வந்தபோது 02.06.2002 அன்று பணிக்காலத்தில் மரணமடைந்த திரு பி. சோனை என்பவரின் மகன் திரு சோ. மோகன்பாபு அவர்களுக்கு கருணை அடிப்படையில் தற்காலிகமாக கிடங்கு மேலாளர் (தரம்-3) பதவியில் பணி நியமனம் வழங்கி மதுரை, வேளாண்மை இணை இயக்குநர் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, 19.10.2012 முற்பகல் முதல் தற்காலிகமாக, மதுரை கிழக்கு வேளாண்மை உதவி இயக்குநர் கட்டுப்பாட்டில் உள்ள ஒத்தக்கடை, துணை வேளாண் விரிவாக்க மையத்தில், கிடங்கு மேலாளர் (தரம்-3) ஆகப் பணியில் சேர்ந்துள்ளார் என்றும் தனியரின் பணியினை 19.10.2012 முற்பகல் முதல் கிடங்கு மேலாளர் (தரம்-3) பதவியில் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு வேளாண்மை இயக்குநர் அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

2. வேளாண்மை இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து, தனியரின் வயது, கல்வித்தகுதி மற்றும் இதர சான்றிதழ்கள் அரசளவில் ஆய்வு செய்யப்பட்டது. கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரிய, விண்ணப்ப நாளன்று குறும வயது தகுதியினை (18) பூர்த்தி செய்யாததால், அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020-க்கு விலக்களித்தும், தனியர், விண்ணப்ப நாளில் 18 வயதினை நிறைவு செய்யாததால் தனியரின் பணியினை வரன்முறை செய்ய தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவு 20(6)(b) மற்றும் பணப்பலன்களை நியமன நாளிலிருந்து முன்தேதியிட்டு வழங்கும்பொருட்டு, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவு 28(2) ஆகியவற்றை தமிழ்நாடு அரசுப்